**சார்பு நீதிமன்றம், திருவைகுண்டம்.**

**நாள். 18.08.2023**

Case No.OS.32/2023

D.W.1

**திரு.மாரி சங்கர நாராயணன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதிதரப்பில் குறுக்கு விசாரணை**

பிராது தபசில் சொத்துக்கள் வாதிக்குரிய பாகத்தை பிரித்து கொடுப்பதற்கு எங்களுக்கு சம்மதமா என்றால் சம்மதமில்லை. பிராது தபசில் சொத்தை பிரித்து வாதிக்குரிய பங்கை அவரிடம் ஒப்படைப்பதற்கு எங்களுக்கு சம்மதமில்லை என்பதால் தான் வாதி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிராது 1 வது தபசில் சொத்து வாதிக்கும் எனக்கும் தகப்பனாரான சண்முகசுந்தரம் என்பருக்கு 26.12.1948 ம் தேதியில் பாகப்பிரிவினை பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பிராது 2 வது தபசில் சொத்து சண்முகசுந்தரம் என்பவருக்கும் வாதியின் தாயார் சொர்ணத்தம்மாளுக்கும் 15.04.1953 தேதியில் கிரையப்பத்திரம் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பிராது 1 மற்றும் 2 தபசில் சொத்துக்கள் சண்முகசுந்தரம் மற்றும் சொர்ணத்தம்மாளும் அனுபவத்து வந்தார்கள் என்றால் சரிதான். வாதியின் தாயார் சொர்ணத்தம்மாளுக்கு நானோ எனது தாயோரோ சகோதரிகளோ வாரிசு கிடையாது என்றால் சரிதான். வாதியின் தாயார் சொர்ணத்தம்மாள் இறப்பிற்கு வாதியும் அவரது தகப்பனார் சண்முகசுந்தரமும் பிராது தபசில் சொத்தை சேர்ந்து அனுபவத்து வந்தார்கள் என்றால் சரிதான். என்னுடைய தாயார் மாரியம்மாள், சண்முகசுந்தரம் என்பவருக்கு 2 வது மனைவி என்றால் சரிதான். சண்முகசுந்தரம் அவர்கள் 01.01.2004 தேதியில் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். இறந்து போன சண்முகசுந்தரம் அவர்களுக்கு நானும் வாதியும் எனது சகோதரி மற்றும் தயாரும் வாரிசுகள் என்றால் சரிதான். சண்முகசுந்தரம் இறப்பிற்கு முன்னர் பிராது சொத்தைப் பொறுத்து எந்த

ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். பிராது 1வது தபசில் சொத்து சண்முகசுந்தரம் அவர்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்பதால் வாதிக்கு அதில் 4/16 பங்கு பாத்தியப்பட்டது என்றால் அதனை நீதிமன்றம்தான் முடிவு செய்யவேண்டும். பிராது 2 வது தபசில் சொத்து வாதியின் தாயார் சொர்ணத்தம்மாளும் சேர்ந்து கிரையம் வாங்கியுள்ளதால் அதில் வாதிக்கு 7/16 பங்கு பாத்தியப்பட்டது என்றால் அதனை நீதிமன்றம்தான் முடிவு செய்யவேண்டும். வாதிக்கு தபசில் சொத்துக்களில் எவ்வளவு பங்கு விகிதாச்சாரம் உள்ளது என்பது பற்று எனக்குத்தெரியாது. நான் எனது எதிர் வழக்குரையில் 22.11.1973 தேதியில் வாதி பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதாக சொல்லியுள்ள விபரம் எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் எனது தாயார் சொல்லி எனக்குத்தெரியும் . 22.11.1973 தேதியிட்ட அசல் பாகப்பாத்திய விடுதலைப்பத்திரம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அதனுடைய நகல் தான் தாக்கல் செய்துள்ளேன். வாதி 22.11.1973 தேதியில் நீங்கள் சொல்லியிருப்பது போல் எவ்வித பாகப்பாத்திய விடுதலைப்பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 22.11.1973 தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தின் அசல் என்னவானது என்றால் வாதி எடுத்துச்சென்றுவிட்டார். மேற்படி வாதி எடுத்துச்சென்றுவிட்டார் என்ற விபரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்குத்தெரியாது. நான் சொல்லியுள்ளது போல் கடந்த 22.11.1973 தேதியில் வாதி பாகப்பாத்திய விடுதலைப்பத்திரமும் எழுதிக்கொடுக்கவில்லை அது பற்றி அவர் அறிந்திருக்கவும் இல்லை என்றால் சரியல்ல. 1973 ல் வாதியின் வயது 17 என்று சொன்னால் அதுபற்றி எனக்குத்தெரியாது நான் பிறக்கவே இல்லை. தற்போது வாதி 22.11.1973 தேதியிட்ட பாகப்பாத்திய விடுதலைப்பத்திரத்தை எடுத்துச்சென்றுவிட்டார் என்று காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. பிராது 1 மற்றும் 2 தபசில் சொத்துக்கள் சேர்ந்து 4 3/4 சென்டு என்று சொன்னால் அது பற்றி எனக்குத்தெரியாது.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று

ஒப்புக்கொள்ளப்பட்டு கையெழுத்து/ கைரேகை செய்யப்பட்டது.

**சார்பு நீதிபதி,**

**திருவைகுண்டம்**